1972 மார்ச் 15]

பொருளாதார சீர்கேடுகளில் மாற்றம் வரும்வரையில் பிச்சைக்காரர்கள் தொடர்ந்து இருப்பார்கள் என்பதுதான் உண்மை. ஆகவே இந்தப் பிச்சைக்காரர்கள் பாதுகாக்கப்படும் அதேநேரத்திலே பிச்சைக்காரர்களாக ஆகப் போகின்றவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்க இந்த நிதியிலிருந்து ஏதேனும் செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, பொருளாதாரச் சீர்கேட்டைச் சீரமைப்பது என்பது ஒன்று. பொருளாதாரச் சீர்கேட்டினால் ஏற்பட்டிருக்கும் விளைவுகளைச் சமாளிப்பது என்பது ஒன்று. வயிற்றுவலி ஏற்பட்ட காரணத்தினால் தலைவலி ஏற்படுகிறது. வயிற்றுக்கோளாறைத் தனியே தீர்க்க வேண்டுமென்று கருதி தலைவலிக்கு மருந்து தடவிக் கொள்கிறோம். அதற்காக வயிற்றுவலியை மறக்கவில்லை, சிகிச்சை அளிக்கிறோம். அதேபோல் பொருளாதாரப் பிரச்னைகளைச் சந்தித்துச் சமாளிக்க வேண்டும். மேலும் அந்தப் பொருளாதாரச் சீர்கேடுகளினால் ஏற்பட்ட விளைவுகளையும் சமாளிக்க வேண்டும். இப்பொழுது விளைவுகளைச் சமாளிக்கும் கட்டத்தில்தான் பிச்சைக்காரர்களின் மறுவாழ்விற்காக அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

* 511. வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதியில் இருந்து அனாதைப் பள்ளிகளுக்கு நிதி உதவும் திட்டம் ஏதாவது அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இப்படிப்பட்ட அனாதை விடுதிகளிலிருந்து, அரசாங்கம் கொடுக்கும் உதவித்தொகை மிகவும் குறைவாக இருக்கிறது என்று மனுக்கள் ஏதேனும் வந்திருக்கிறதா ? இனிமேலாவது அதிக உதவி செய்யத் திட்டமிடுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அப்படிப்பட்ட மனு ஏதும் இது வரையில் வரவில்லை.

திரு. எம். தேவராசன்: தலைவரவர்களே, தமிழக அரசு இப்பொழுது 3 பிச்சைக்காரர்கள் விடுதிகளைக் கட்டியிருப்பதாகச் சொல்லப்பட்டது. காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலே எத்தனை விடுதிகள் கட்டப்பட்டன என்பதற்குத் தகவல் இருக்கிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அப்பொழுதிருந்த மாநகராட்சியும் நகராட்சியின்மூலம் அவர்கள் சில விடுதிகள் பிச்சைக்காரர்களுக்கு நடத்திக் கொண்டு வந்தார்கள்.

திரு. கா. காளிமுத்து: தலைவர்வர்களே, புனிதமான் இந்த பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்திற்கு மத்திய சர்க்காரானது மானியம் தருவதற்கு உத்தேசித்திருக்கிறதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இதுவரையில் கொடுக்கவில்லை. ஆனால் கேட்பதாக இருக்கிறோம், கொடுக்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இந்த ஆட்சியில்தான் அதிகமான பிச்சைக்காரர்கள் தோன்றியிருக்கிறார்கள், ஆகவேதான் இப்படிப்பட்ட பிச்சைக்காரர் விடுதிகள் அமைக்க தேவை ஏற்பட்டது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, பழைய பிச்சைக்காரர்கள் நீடிக்கிறார்கள்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, எல்லாம் ஆண்டவன் படைப்பு என்று நம்பும் இந்தச் சமுதாயத்தில், இந்தப் பிச்சைக்காரர்களையும் உருவாக்கிய ஆண்டவனின் நிதியிலிருந்து, ரிலிஜியஸ் எண்டோமெண்ட் நிதியிலிருந்து அரசாங்கம் உதவி பெற முயற்சித்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஆண்டவரிலேயே பிச்சாண்டவரும் இருக்கிறார்.

திரு. எம். சுரேந்திரன்: சார், இந்த அனாதை விடுதிகளுக்கு உதவி தரப்படுமா என்று கேட்கப்பட்டிருக்கிறது. பிச்சைக்காரர்கள் என்றால் அனாதைகளும் பிச்சைக்காரர்கள்தானே, அவர்களுக்கும் ஏன் உதவி அளிக்கக் கூடாது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: பிச்சைக்காரர்கள் வேறு, அனாதைகள் வேறு. பிச்சைக்காரர்கள் என்றால் பிச்சை எடுத்து வருபவர்கள். அனாதைகள் என்றால் காப்பாற்ற யாருமற்ற, தாய் தந்தை இல்லாத பிள்ளைகள், கணவனாலும் மற்றவர்களாலும் கைவிடப்பட்ட பெண்கள் ஆகிய இப்படிப்பட்டவர்கள் அனாதைகளாகக் கருதப்படுகிறார்கள். அவர்கள் பிச்சை எடுப்பவர்கள் அல்ல. பிச்சை எடுப்பவர் வேறு சிலர். இவர்கள் பிச்சை எடுக்கிறார்கள்,

1972 மார்ச் 15]

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இந்தப் பிச்சைக்காரர் விடுதிகளில் சேர்க்கப்படும் பிச்சைக்காரர்கள் எந்த அடிப்படையில் சேர்க்கப்படுகிறார்கள், பிச்சை எடுப்பது ஒன்றைக்கொண்டுதானா? ஏனென்றால் பிச்சைக்காரர்களில் சிலர் பணம் சேர்த்து வைத்துக் கொண்டு ..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விளக்கமெல்லாம் வேண்டாம், கேள்வியாகக் கேளுங்கள். நேரமாகிறது.

திரு. கே. எ. வகாப் : அப்படி இருக்கிறார்கள். ஆகவே அதில் உண்மையான பிச்சைக்காரர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, பிச்சைக்காரர்கள் எங்கெங்கு பிச்சை எடுக்கிறார்களோ, பஸ் ஸ்டாண்ட், ரயில்வே ஸ்டேஷன், கோயில், இன்னும் பல வீதிகளில் பிச்சை எடுக்கிறார்கள்—அவர்களைப் போலீசார் நேரடியாகக் கைது செய்து வழக்கு மன்றத்தில் நிறுத்தி, அவர்கள் பிச்சை எடுக்கிறார்கள், அவர்களுக்கு யாரும் இல்லை என்ற வகையில் கொண்டு வருகிறார்கள். முதலிலே நாம் தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கு முதலிடம் தந்து அவர்களின் மறுவாழ்வுக்காக ஒரு நல்ல ஏற்பாட்டை இப்பொழுது நடத்திக்கொண்டு வருகிறோம். பிறகு ஏனைய பிச்சைக்காரர்களின் நிலைமைகளை இந்த அரசாங்கம் கவனிக்கலாம்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குத்தகைப் பாட்டம் நிலங்கள்

*512. வினா—திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் முன்பிருந்த அரசால் குத்தகைப் பாட்டம் என்ற முறையிலே கொடுக்கப்பட்ட நிலங்களுக்கு பட்டா வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் உதயகிரி கோட்டை என்ற பகுதியில் சுமார் 140 ஏக்கர்கள் அளவிற்கு தனியார் கையில் இருக்கிறது. இதை மீட்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அதேமாதிரி எஸ்டேட் உடைமையாளர்கள் அருகாமையில் உள்ள புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து வைத்திருக்கிறார்கள். அதையும் திரும்பப் பெறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?